பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், வடுகத்தம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி.ப.அசலாம்பு.,
ந.க.எண்.1/2024 நாள்:2.02.2024

பொருள் மனைப்பிரிவு – சேலம் மாவட்டம் – பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் – வடுகத்தம்பட்டி ஊராட்சி ச.எண். 29/1A1, 29/1B1B, 29/1B1C, 31/1A1– இல் 3.55 ஏக்கர் (அல்லது) 14351.00 சமீ பரப்பில் மனைப்பிரிவு அனுமதி கோரியது – உத்தேச சாலைகள் மற்றும் பூங்காவினை ஒப்படைத்தது - குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றது – ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை
1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண்.19799/2020 போ, நாள்.24.12.2020.
2.அரசாணை எண்138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். நாள்.04.06.2004.
3.அரசாணை எண்18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்31.01.2020.
4.அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை யுடி4(3) நாள். நாள்.23.09.2020.
5.அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள். நாள்.09.12.2020.
6.அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017–வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.30.08.2017.
7.நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1,நாள்.08.09.2017.
8. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண். நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண். SLM/CWX1EMYP/14016/2023/TCP, நாள்.30.08.2023.
9. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.SLM/CWX1EMYP/14016/2023/TCP, நாள்.04.10.2023
10. வடுகத்தம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட தாவா பத்தரம் எண்.5477/2023
11.தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்க்கு வழங்கப்பட்ட தாவா பத்திரம் எண்.5476/2023
12. வடுகத்தம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் தீர்மான எண். 03, நாள். 02.02.2024
13.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) பெத்தநாயக்கன்பாளையம் அவர்களின் கடித ந.க.எண்.1418/2020/தி2 நாள். .01.2024.

உத்தரவு :

பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் – வடுகத்தம்பட்டி ஊராட்சி ச.எண். 29/1A1, 29/1B1B, 29/1B1C, 31/1A1– இல் 3.55 ஏக்கர் (அல்லது) 14351.00 சமீ பரப்பளவில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் SWP/DTCP/SALEM/LAYOUT NO.231/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களின் பார்வை 9ல் காணும் உத்தரவில் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 13ல் காணும் பெத்தநாயக்கன்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) அவர்களின் கடிதத்தில் உரிய உள்ளாட்சி விதிமுறைகளை பின்பற்றி இறுதி உத்திரவு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

For Swarnapuri Co-op. House Building Society Ltd., No. S. 866

மேலும் 58.658 சமீ (0.56%) உள்ளாட்சிக்கும் மற்றும் 56.22 சமீ (0.54%) TANGEDCOக்கும் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 8ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 10 காணும் விவரப்படி உள்ளாட்சிக்கும் மற்றும் 11–ல் காணும் விவரப்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும்(TANGEDCO) தானம் செய்யப்பட்டுள்ளது. பார்வை 12 ன்படி இம்மனைப்பிரிவுக்கு

உத்தரவில் தெரிவித்துள்ளவாறு கூராய்வு கட்டணம் மற்றும் 3% நிலபயன் மாற்றக் கட்டணமாக ரூ.53,250/- (ரூபாய் ஐம்பத்து மூன்றாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) 31.01.2024 தேதியும், கூராய்வு கட்டணம் ரூ.1000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) மற்றும் மனைக்கு தலா ரூ.1000/- வீதம் மொத்தம் உள்ள 75 மனைகளுக்கும் சேர்த்து (75*1000=75000) ரூ.75000/- (ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) ஊராட்சி பொது நிதியில் 01.02.2024 ம் தேதியும் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே வடுகத்தம்பட்டி ஊராட்சி க.எண். 29/1A1, 29/1B1B, 29/1B1C, 31/1A1- இல் 3.55 எக்கர் (அல்லது) 14351.00 ச.மீ பரப்பில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பார்வை 9ல் காணும் செயலானையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகள் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு; வரைபடம்

P. அருணாச்சலம்

தலைவர்
ஊராட்சிஒன்றியம்,
வடுகத்தம்பட்டி

பெறுதல் :
செயலாளர்,
ஸ்வர்ணபுரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிட் எஸ். 866.,
சேலம்.

நகல்:
1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம்.
2.வட்டாட்சியர், பெத்தநாயக்கன்பாளையம்.
3.சார் பதிவாளர், வாழப்பாடி.
4.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), பெத்தநாயக்கன்பாளையம்

For Swarnapuri Co-op. House Building Society Ltd., No. S. 866

Secretary

For Swarnapuri Co-op. House Building Society Ltd., No. S. 866

Secretary